ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. தூய கிளேமண்ட் குறிப்பிட்டுள்ளபடி திருவிவிலியம்,
   (1) ஒரு மேலான நூலாகும்.
   (2) ஒரு விசேட நூலாகும்.
   (3) ஒரு புனித நூலாகும்.
   (4) ஆச்சரியத்திற்குரிய ஒரு நூலாகும்.
   (5) ஒரு பழைமை வாய்ந்த நூலாகும்.

2. 'புத்தகம்' எனப் பொருள்படும் கிரேக்கமொழிச் சொல் யாது?
   (1) பிப்லியோன் (2) வல்கேட் (3) செப்துவாஜின்த் (4) டிடாக்கே (5) எக்கிளேசியா

3. இறைவனுடைய வல்லமையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் வாக்களித்த நாட்டுக்கு இஸ்ராயேல் மக்களோடு செல்ல மாட்டீர்கள் என்று கூறப்பட்டது,
   (1) ஆரோனுக்கும் யோசுவாவிற்கும்
   (2) யோசுவாவிற்கும் மோசேக்கும்
   (3) இஸ்ராயேலுக்கும் மக்கள் தலைவர்களுக்கும்
   (4) அமலேக்கியருக்கும் ஆரோனின் வழிமரபினருக்கும்
   (5) மோசேக்கும் ஆரோனுக்கும்

4. இறைவனின் மத்தியஸ்தத்தோடு அரசனுக்கு முன்னிலையில் செல்லத்தேவையான தைரியத்தைப்பெற்று, அவரது விருப்பங்களை விசுவாசத்தின் மூலம் வெற்றிகொண்டவர்,
   (1) எஸ்தர் (2) சிம்சோன் (3) சாமுவேல் (4) தெபோரா (5) பாருக்

5. அரச செலவீனங்களுக்காக மக்களிடமிருந்து வரி அறவிடும் முறையை அறிமுகப்படுத்தியவர்,
   (1) தாவீது அரசன் (2) சவுல் அரசன் (3) சாலமோன் அரசன்
   (4) றெகெபோவாம் அரசன் (5) ஜெரோபோவாம் அரசன்

6. முதலாவது படைப்புக் கதையின்படி, இரண்டாம் நாளுக்கு சமாந்தரமாக எத்தனையாம் நாள் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது?
   (1) முதலாம் நாள் (2) மூன்றாம் நாள் (3) நான்காம் நாள்
   (4) ஐந்தாம் நாள் (5) ஆறாம் நாள்

7. இரண்டாவது படைப்புக் கதையின்படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயற்பாட்டில் தொடர்புபடுவது,
   (1) உயிருள்ள அனைத்திற்கும் பெயரிட்டதன் மூலம்
   (2) படைப்பை ஆளுவதன் மூலம்
   (3) படைப்பை விருத்திசெய்வதன் மூலம்
   (4) பாவத்திலிருந்து விலகியிருப்பதன் மூலம்
   (5) பலி ஒப்புக்கொடுப்பதன் மூலம்

8. 'பாவம்' பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.
   A - இறைவனுக்குச் சொந்தமானதைப் பறித்தெடுத்தலாகும்.
   B - இவ்வுலகீகத்திற்கு அடிமையாதலாகும்.
   C - இறைத்திட்டத்தை விகாரப்படுத்துதலாகும்.
   D - சீனாய் உடன்படிக்கையை மீறுதலாகும்.
   இவற்றுள் திருவிவிலிய வல்லுனர்கள் எடுத்துக்காட்டுவதன்படி 'பாவம்' பற்றிய சரியான கூற்றுகளாவன,
   (1) A, B (2) A, C (3) A, D (4) B, C (5) B, D

tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

9. மனித பலவீனங்களைப் பயன்படுத்தி இறைவன் தமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார் என்பதை எடுத்துக்காட்டுவதற்குப் பொருத்தமான ஓர் உதாரணம்,
(1) ஈசாக்கின் வாழ்க்கை (2) ஆபிரகாமின் வாழ்க்கை
(3) மோசேயின் வாழ்க்கை (4) தாவீது அரசனின் வாழ்க்கை
(5) யாக்கோபுவின் வாழ்க்கை

10. யூத பாஸ்கா சடங்கில் புளியாத அப்பம் பயன்படுத்தப்படுவதன் கருத்து,
(1) திருவிழா அல்லது திருநாள் என்பதாகும்.
(2) இறைவனின் கட்டளையை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.
(3) இறைவனோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் அடையாளம் என்பதாகும்.
(4) அடிமைத்தனத்தின் போது அனுபவித்த துன்பங்களை நினைவுகூரும் நாள் என்பதாகும்.
(5) எதிர்பாராத சந்தர்ப்பத்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைந்ததை நினைவுகூருதல் என்பதாகும்.

11. பார்வோனின் முடியின் மீது காணப்பட்ட சின்னம் யாது?
(1) பாம்பு (2) ஆடு (3) வெட்டுக்கிளி (4) கழுகு (5) பருந்து

12. கிழக்குலகின் புராதன நாகரிகங்களில் நிலவிய அரசியல், சமூகப் பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் சிறப்புத் தன்மை ஆவது,
(1) இருபாலாரும் உடன்பாட்டின் மீது நிபந்தனைகளை அமைத்துக் கொண்டமை
(2) உடன்படிக்கைக்குட்பட்டபோதும் அதில் நம்பிக்கைத் துரோகமாக செயற்பட்டமை
(3) இருபாலாரும் உடன்பாட்டின் மீது நிபந்தனைகளை அமைத்தலும், இறைவன் ஒருவர் அதற்கு சாட்சி பகருதலும்
(4) எப்போதும் இறைவன் உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல்
(5) மனிதன் உடன்படிக்கையில் நிலைத்திராது எப்போதும் அதனைப் புறக்கணித்தல்

13. நாடு கடத்தப்பட்ட மக்களுக்குப் புதியவாழ்வு பற்றிய எதிர்நோக்கை ஏற்படுத்தி, அப்புதிய வாழ்வு, அவர்களின் வாழ்க்கையில் எல்லாத் தேவைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும் என எடுத்துக்காட்டிய இறைவாக்கினர்,
(1) எசாயா (2) ஆமோஸ் (3) எசக்கியேல் (4) எரேமியா (5) மீக்கா

14. இறைவனுக்காக, அவருடைய செய்தியைப் பகிரங்கமாகப் பயமின்றிக் காலத்திற்குப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தியவர்களைக் குறிக்கும் கிரேக்கச் சொல் எது?
(1) நபி (2) ப்றொபேராஸ் (3) யாவே (4) ஹெசெட் (5) மதடேஸ்

15. இறைவாக்கினர் எசாயாவின் திராட்சைத்தோட்டம் பற்றிய கவிதையின் முதல் வசனத்தில் அன்பராக அடையாளம் காட்டப்படுபவர்,
(1) இஸ்ராயேல் குடும்பத்தார் (2) யூத மக்கள்
(3) மந்தைகளின் மேய்ப்பர் (4) இறைவன்
(5) இயேசு

16. பலஸ்தீனாவை, கலிலேயா, யூதேயா, சமாரியா எனப் பகுதிகளாகப் (மாகாணங்களாக) பிரித்து, ஆட்சிசெய்தவர்கள்,
(1) ஆளுநர்கள் ஆவர். (2) அரசர்களாவர்.
(3) பிரதான அமைச்சர்களாவர். (4) பிரதேச ஆட்சியாளர்களாவர்.
(5) பேரரசர்களாவர்.

17. பலஸ்தீனாவில் வாழ்ந்தவர்களில் சிலுவைத் தண்டனையே விதியாக இருந்தது,
(1) வரிதண்டுவோருக்கும் அடிமைகளுக்கும்
(2) பாவிகளுக்கும் கள்வர்களுக்கும்
(3) அநியாயவட்டிக்காரர்களுக்கும் சூதாட்டக்காரர்களுக்கும்
(4) சமாரியருக்கும் ஆயக்காரருக்கும்
(5) செலோத்தேயருக்கும் கள்வர்களுக்கும்

More Past Papers at
tamilguru.lk

18. மோசேயின் படிப்பினைகளை மிகக்கடுமையாகக் கடைப்பிடித்தவர்கள்,
(1) பரிசேயர் (2) சதுசேயர் (3) மறைநூல் அறிஞர்
(4) எஸ்சேனியர் (5) ஏரோதியர்

19. இறையரசு பற்றிக் கூறப்பட்டுள்ள சில கருத்துக்கள் பின்வருமாறு:
A - இறையரசின் அதிபதி இறைவன்
B - இவ்வாதிக்கத்தின் கீழ்வாழும் மக்கள்
C - மக்களை ஆட்சிசெய்தல்
D - யூதமக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தல்
E - மனித சக்தியினால் நிறைவாகக் கட்டியெழுப்பப்பட்ட அரசாதல்
மேற்கூறியவற்றுள் இறையரசு பற்றிய மிகப் பொருத்தமான கருத்துக்கள் உள்ளடங்கிய கூற்றுகளைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) A, C, D (5) A, C, E

[பக். 3 ஐப் பார்க்க

40. "மாட்சிமையையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர்" எனத் திருப்பாடலில் சங்கீத ஆசிரியர் வெளிப்படுத்தியிருப்பது,
(1) இறைவனின் மாட்சிமையைப் பற்றியாகும்.
(2) இறைதன்மையின் மேன்மை பற்றியாகும்.
(3) மனிதத்தன்மையின் மேன்மை பற்றியாகும்.
(4) மனிதத்தன்மையின் மாட்சிமை பற்றியாகும்.
(5) இயேசுவின் மேன்மை பற்றியாகும்.

41. "கண்களுக்குப் புலப்படுகின்ற படைப்பு அனைத்திலும் படைத்தவரை அறிந்து அவரை அன்பு செய்யக்கூடியவன் மனிதன் மட்டுமே." இவ்வெளிப்பாட்டின் மூலம் மனிதனின் உயர்வான தன்மை மேலெடுத்துக் காட்டப்படுகிறது. இதனை ஒரு படிப்பினையாக முன்வைப்பது,
(1) மறைச் சுதந்திரம்
(2) இன்றைய உலகில் திருச்சபை
(3) கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு
(4) கத்தோலிக்க திருச்சபையின் பெரிய குறிப்பிடம்
(5) மகளிர் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை

42. மெசியாவின் பண்புகளில் 'சாலோம்' என்பதன் கருத்து பின்வருவனவற்றுள் எதனூடாக வெளிப்படுத்தப்படுகிறது?
(1) வியத்தகு ஆலோசகர்
(2) வலிமை மிகு இறைவன்
(3) என்றுமுள்ள தந்தை
(4) அமைதியின் அரசர்
(5) தார்மீக மெசியா

43. இறைவனுடைய விருப்பத்தினை ஆராய்ந்து பார்த்து அதற்குக் கீழ்ப்படிந்து அதன்படி வாழுதல் என்பது,
(1) தார்மீகப் பண்பாகும்.
(2) நியாயமாகும்.
(3) நீதியாகும்.
(4) சமத்துவமாகும்.
(5) நல்லுறவாகும்.

44. மறை மாவட்டத்தை நிருவகித்தல், ஆயர்களைத் தெரிவுசெய்தல் ஆகிய பணிகளைப் பேரவையின் மூலம் நிறைவேற்றும் திருச்சபை
(1) கத்தோலிக்கத் திருச்சபை
(2) இலங்கைத் திருச்சபை
(3) பிரஸ்பிடேரியன் சபை
(4) பப்டிஸ்ட் திருச்சபை
(5) தென்னிந்தியத் திருச்சபை

45. கிறிஸ்தவம் அல்லாத பிற மறைகள் பற்றி திருச்சபையின் கண்ணோட்டம், மனப்பாங்கு பற்றிக் கவனம் செலுத்துவதற்கான செயலகம் ஒன்று எவ்வருடத்தில் நிறுவப்பட்டது?
(1) 1848
(2) 1864
(3) 1948
(4) 1964
(5) 2000

46. திருத்தூதர் காலத்தில் 'கைகளை வைக்கும் வழிபாடு' என அறிமுகப்படுத்தப்பட்ட அருளடையாளம் 'உறுதிபூசுதல்' என்னும் பெயர் பெற்ற நூற்றாண்டு எது?
(1) 3
(2) 4
(3) 5
(4) 6
(5) 7

47. கிறிஸ்துவின் உறுதிப்பாடும் கட்டளைகளும் ஒன்றிணைகின்ற மாபெரும் மறைபொருளாகிய அருளடையாளமான நற்கருணையோடு தொடர்பான நற்செய்திப் பகுதி எது?
(1) "இதை என் நினைவாகச் செய்யுங்கள்"
(2) "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருப்பேன்"
(3) "வாழ்வு தரும் உணவு நானே"
(4) "என்னை உண்பவன் என்றும் உயிர்வாழ்வான்"
(5) "எங்களோடு தங்கியிரும் ஆண்டவரே"

More Past Papers at
tamilguru.lk

48. மதிப்பிற்குரிய ஜோண் வெஸ்லியின் நற்செய்திப் பணியின் மறுசீரமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட சபை,
(1) அங்கிலிக்கன் சபை
(2) இலங்கைத் திருச்சபை
(3) மெதடிஸ்த திருச்சபை
(4) புரட்டஸ்தாந்து திருச்சபை
(5) பிரஸ்பிடேரியன் திருச்சபை

49. மனித அழைப்பை நிறைவு பெறச் செய்ய இன்றியமையாத ஊடகம் எனக் கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி கற்பிப்பது என்ன?
(1) 'அவன் செல்வச் சிறப்புடன் வாழ வேண்டும்' என்பதை ஆகும்.
(2) 'அருளடையாளங்களைப் பெற வேண்டும்' என்பதை ஆகும்.
(3) 'தினம் செபிக்க வேண்டும்' என்பதை ஆகும்.
(4) 'தினமும் திருப்பலியில் பங்குபற்ற வேண்டும்' என்பதை ஆகும்.
(5) 'சமூகமாக வாழ வேண்டும்' என்பதை ஆகும்.

50. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 'திருத்தூதரின் படிப்பினைகள்' அடங்கிய நூல்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு திருமுழுக்குப் பெற இருப்பவர்கள் அனைவராலும் முன்கூட்டியே நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு செயலாக அமைவது,
(1) ஒரு சந்தி கடைப்பிடித்தல்
(2) உடல் ரீதியாகத் தூய்மைப்படுத்திக்கொள்ளல்
(3) ஒப்புரவு செய்து கொள்ளுதல்
(4) வெண்ணிற ஆடை தயார்படுத்திக் கொள்ளுதல்
(5) சபையின் தலைவர்களைச் சந்தித்தல்

* * *

20. பெத்தானியாவில் நறுமணத் தைலம் பூசப்பட்ட நிகழ்வின் மூலம் தூய மாற்கு முன்வைக்க முற்படும் செய்தி என்ன?
(1) இயேசு இறைத்திட்டம் முடிவுற்றதெனக் கூறுகின்றார் என்பதாகும்.
(2) இயேசுவின் தாழ்மை பற்றியாகும்.
(3) மெசியாவின் இரகசியத்தை வெளிப்படுத்துவது பற்றியாகும்.
(4) யூதாஸ் காட்டிக்கொடுப்பான் என்பதாகும்.
(5) மெசியாவின் பாஸ்கா நிகழ்ச்சிக்கு முன் நறுமணத்தைலம் பூசப்பட்டமையையாகும்.

21. “இறைவன் இவ்வுலகை எவ்வளவு அன்பு செய்தாரெனில் தமது ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு அளித்துள்ளார்.” இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
(1) இறை அன்பில் வாழ்வதன் மேன்மை பற்றியாகும்.
(2) இறை தந்தை மக்களுக்குக் காட்டும் இரக்கம் பற்றியாகும்.
(3) படைத்தவரின் அதிமேலான அன்பு பற்றியாகும்.
(4) இறை அன்பில் மீட்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழி பற்றியாகும்.
(5) படைத்தவருடன் முழுமையாக ஒன்றுபட்ட வாழ்க்கை பற்றியாகும்.

22. சிலுவையின் மீது வைத்த குற்ற அறிக்கையைத் திருத்தி மீண்டும் எழுதும் என யூத தலைமைக் குருக்கள் பிலாத்துவிடம் முன்வைத்த ஆலோசனை என்ன?
(1) ‘நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்’
(2) ‘நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் அல்ல’
(3) ‘இயேசு யூதர்களின் அரசன்’
(4) ‘யூதர்களின் அரசனாகிய நாசரேத்து இயேசு’
(5) ‘யூதர்களின் அரசன் நான் என்று அவனே சொல்லிக்கொண்டான்’

23. தூய யோவான் நற்செய்தி 18:1-11 இன் படி இயேசு பேதுருவிடம் “வாளை உறையில் போடு” எனக் கூறியது,
(1) வாளை எடுப்பவன் வாளால் மடிவான் என்பதனாலாகும்.
(2) இவ்வுலக அதிகாரத்திற்குச் சுயவிருப்பத்தோடு பணிகிறார் என்பதனாலாகும்.
(3) பேதுரு தன்னை மறுதலிப்பார் என தான் அறிந்திருந்தமையாலாகும்.
(4) விண்ணுலக சேனைகள் இயேசுவிற்குச் சார்பாகப் போரிடுவர் என்பதனாலாகும்.
(5) இயேசுவைக் கைதுசெய்ய ஆயுதங்களோடு வந்ததனாலாகும்.

24. ஒத்தமை நற்செய்தியாளர்களில் ‘இறையரசு’ என்னும் வார்த்தையை மாற்கு 14 தடவைகளும், லூக்கா 32 தடவைகளும் பயன்படுத்த மத்தேயு 4 தடவை மாத்திரமே பயன்படுத்துகிறார். இதற்கான காரணமாக எடுத்துக்காட்டப்படுவது,
(1) யூதர்கள் இறைவனின் பெயரை உச்சரிக்கக் காண்பிக்கும் விருப்பமின்மை
(2) ஒத்தமை நற்செய்திகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றமை
(3) நற்செய்தியாளர்கள் மூவரினதும் நோக்கம் வேறுபட்டிருக்கின்றமை
(4) நற்செய்தியாளர்கள் மூவரினதும் பின்னணி வேறுபட்டிருந்தமை
(5) கிறிஸ்துவின் வாழ்க்கை விபரங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டமை

25. இயேசு தமது சீடர்களுக்கு தூய ஆவியின் வழியாகப் பாவங்களை மன்னிக்கும் வல்லமையை அளித்தது,
(1) அவர்களது தலைமேல் கைகளை விரித்து செபித்ததன் மூலமாகும்
(2) அவர்களோடு முழந்தாட்படியிட்டு தந்தையிடம் செபித்ததன் மூலமாகும்
(3) அவர்கள் மேல் ஊதி வாழ்வையும் பலத்தையும் அளித்ததன் மூலமாகும்
(4) கர்த்தர் கற்பித்த செபத்தைக் கற்பித்ததன் மூலமாகும்
(5) இறுதி இரா உணவின் பின்னராகும்

26. தூய பவுல் சிறையிலிருந்தபோது தனது பிள்ளையாக மதித்த ஒருவரைப்பற்றித் தமது திருமுகத்தில் கூறுகிறார். அவரின் பெயர் என்ன?
(1) பர்னபா (2) சீலா (3) மாற்கு (4) ஒனேசிமின் (5) பேதுரு

27. உடலின் உயிர்ப்பு பற்றி விளக்குவதற்காகத் தூய பவுல் பயன்படுத்தும் உவமை
(1) இறந்த உடல் (2) விதைக்கப்படும் விதை (3) முளைவிடும் தளிர்
(4) வளரும் மரம் (5) உலர்ந்த எலும்புகள்

28. திருப்பலியில் சொல்லப்படும் ‘நிசேயா விசுவாசப் பிரமாணம்’ திருச்சபை முழுவதும் விசுவாச சத்தியமாக ஏற்றுக்கொண்ட பொதுச்சங்கம்,
(1) எருசலேம் பொதுச்சங்கம் (2) நிசேயா பொதுச்சங்கம் (3) கால்சிடோன் பொதுச்சங்கம்
(4) எபேசு பொதுச்சங்கம் (5) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம்

29. இலங்கைத் தீவுக்குப் போர்த்துக்கேயரின் வருகையின் செய்தியினை அக்காலத்தில் இருந்த பரிசுத்த ஆயரான இரண்டாவது ஜுலியன் திருத்தந்தைக்கு அறிவித்தவர் யார்?
(1) பிரான்சிஸ் கோ த அல்மெய்டா (2) லோறன்சோ த அல்மெய்டா
(3) அருட்தந்தை விசென்னே (4) I வது மனுவேல் அரசன்
(5) V வது தர்மபராக்கிரம மன்னன்

[பக். 4 ஐப் பார்க்க

1939

30. திருச்சபையினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட முதலாவது ஐரோப்பிய மறைத்தூதுவர்,
(1) அருட்தந்தை ஒராஷியோ பட்டிகினி அடிகளார்
(2) அருட்தந்தை அந்தோனியோ கைத்தானோ அடிகளார்
(3) அருட்தந்தை ஜோசப் பிராவி அடிகளார்
(4) அருட்தந்தை வின்சன் றொசாயிரோ அடிகளார்
(5) அருட்தந்தை செமேரியா அடிகளார்

31. தேசிய குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது குருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தவர்,
(1) அருட்தந்தை யோசப்வாஸ் அடிகளார்
(2) அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
(3) அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜீன் அடிகளார்
(4) மேன்மைதங்கிய ஆயர் எட்மன்பீரிஸ் ஆண்டகை
(5) மேன்மைதங்கிய ஆயர் டி மசனட் ஆண்டகை

32. VII வது புவனேகபாகு மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க போர்த்துக்கலில் இருந்து வருகை தந்த மறைத்தூதுக் குழுவினருக்குத் தலைமை தாங்கியவர் யார்?
(1) அருட்தந்தை விசென்னே அடிகளார்
(2) அருட்தந்தை மிகேல் டி மெலோ அடிகளார்
(3) அருட்தந்தை ஜோசப் ருவல்யே அடிகளார்
(4) அருட்தந்தை ஜோசப்பிராவி அடிகளார்
(5) அருட்தந்தை ஜோண் த விலா த கொண்டே அடிகளார்

33. போர்த்துக்கேயர் காலத்தில் தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்,
(1) அருட்தந்தை டி நொபிலே அடிகளார்
(2) அருட்தந்தை ஹென்றி ஹென்றிகஸ் அடிகளார்
(3) பேதுரு புலவர்
(4) சுவாங்கார்வாலு பாதிரியார்
(5) பேர்சிவல் ஐயர்

34. மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகத்தேவைகளை நிறைவுசெய்தல் ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு இலங்கையில் சகல மறை மாவட்டங்களிலும் பணிகளில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ சமூக நலன்புரி நிறுவனம் எது?
(1) தூய வின்சென் டீ பவுல் இரக்கப்பணி
(2) கிறிஸ்தவ இளைஞர் கழகம்
(3) கிறிஸ்த்வ மகளிர் கழகம்
(4) கரித்தாஸ் இலங்கை (செடெக்)
(5) இல்லற அப்போஸ்தலிக்க பணி

35. திருத்தூதர் கால வழிபாடு மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். அவற்றில் இரண்டு பிரிவுகளாவன,
(1) இறைவார்த்தை வழிபாடும் நற்கருணை வழிபாடும்
(2) இறைவார்த்தை வழிபாடும் இறுதிச் சடங்கும்
(3) ஆரம்பச் சடங்கும் உட்கொள்ளும் சடங்கும்
(4) ஆரம்பச் சடங்கும் அப்பம் பிட்கும் சடங்கும்
(5) 'அகபே' உணவு விருந்தும் அப்பம் பிட்கும் சடங்கும்

36. பாவிகளுக்குத் தங்கள் கைகளைத் தூய்மையாக்கவும், உள்ளங்களைத் தூய்மையாக்கவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது,
(1) தூய யோவான் எழுதிய இரண்டாம் திருமுகத்திலாகும்
(2) திருத்தூதர் பணி நூலிலாகும்
(3) தூய யாக்கோபு எழுதிய திருமுகத்திலாகும்
(4) கொலோசேயர் திருமுகத்திலாகும்
(5) தூய பேதுரு எழுதிய முதலாவது திருமுகத்திலாகும்

37. உரோமை வழிபாடுகளின் விசேட பண்புகளில் காணப்படும் கம்பீரத் தன்மையின் இரு முக்கிய விடயங்களும் எவை?
(1) அடக்கமாக இருத்தல் - அறிவு சார்ந்திருத்தல்
(2) சிறந்த முன் ஆயத்தம் - உயர்ந்த பண்புகளைக் கொண்டிருத்தல்
(3) அறிவு சார்ந்திருத்தல் - சுருக்கமானதாயிருத்தல்
(4) உயர்ந்த பண்புகளைக் கொண்டிருத்தல் - அறிவு சார்ந்திருத்தல்
(5) சிறந்த முன் ஆயத்தம் - அடக்கமாக இருத்தல்

More Past Papers at
tamilguru.lk

38. இயேசுக்கிறிஸ்துவை 'அடிப்படை அருளடையாளம்' எனக் குறிப்பிடுபவர்,
(1) காள் ராகர்
(2) நியூட்டன்
(3) தூய அகுஸ்தினார்
(4) தூய சிப்பிரியான்
(5) தூய தோமஸ் அக்குவைனாஸ்

39. திருப்பலி, கிறிஸ்தவ வாழ்வின் மையம் என்பது பற்றிக் கலந்துரையாடும் சுற்றுமடல் எது?
(1) மிஸ்றேரியும் பீதேய்
(2) மிதியாதோர் தெய்
(3) எக்கிலோசியாத எயுக்கரிசிதியா
(4) சக்கிரமென்டும் யுனிடாடிஸ்
(5) லூமென் ஜென்சியும்

[பக். 5 ஐப் பார்க்க

AL/2016/43/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி I இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) யூதர்களின் செபக்கூடத்தின் முக்கியத்துவம் பற்றி **நான்கு** விடயங்கள் எழுதுக.
   (ii) தூய பவுலின் வாழ்க்கை பற்றி **நான்கு** விடயங்கள் எழுதுக.
   (iii) ஆரம்பத் திருச்சபையில் திருத்தொண்டர்கள் (தியாக்கோன்) ஆற்றிய பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iv) கி.பி. 325 - 451 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கூட்டப்பட்ட பொதுச்சங்கங்கள் **நான்கினதும்** பெயர்களை எழுதுக.
   (v) ஆரம்பகால திருச்சபையின் திருவழிபாடு யூத வழிபாட்டுப் பண்புகள் மரபுகளைத் தழுவிப் பெற்ற செல்வாக்குகள் **நான்கினை** எழுதுக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

2. (i) மத்திய காலத்தில் சித்திரக்கலை வளர்ச்சிக்கு உதவிய **நால்வரைப்** பெயரிடுக.
   (ii) இறைவாக்கினர் என்றால் யார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக எழுதப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் **நான்கு** எழுதுக.
   (iii) தோமாவுக்குத் தோன்றுதல் மூலம், தூய யோவான் சீடர்களின் வாழ்க்கைக்கு முன்வைக்கும் வழிகாட்டல்கள் **நான்கினைச்** சுருக்கமாக விளக்குக.
   (iv) 1682 ஆம் ஆண்டு ஜுலை 1 ஆம் திகதிய ஆணைச்சட்டத்தினால் கத்தோலிக்கருக்கு எதிராக விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (v) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'மத்திய பாடசாலைகள் ஆணைக்குழு' மூலம் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் **நான்கினை** விபரிக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

3. (i) சீனாய் உடன்படிக்கை உறுதிசெய்யப்பட்ட முதலாவது கட்டத்தை (வி.ப. 24 : 3 - 4) **நான்கு** விடயங்களில் எழுதுக.
   (ii) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த அமலமரித் தியாகிகள் சபையினரால் நிறைவேற்றப்பட்ட சிறப்பான பணிகள் **நான்கினை** எழுதுக.
   (iii) இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருமுழுக்கு அருளடையாளத்தை அளிப்பதில் கையாளப்பட்ட முறைகள் **நான்கினை** எழுதுக.
   (iv) அருட்தந்தை ரெயாட் டீ ஷார்டேன் அடிகளார் (1881 - 1955) பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.
   (v) 1 கொரிந்தியர் 12:21 இன் படி கண், கை, தலை, பாதம் என்னும் உறுப்புக்கள் மூலம் அடையாளப்படுத்தப்படும் விடயங்கள் யாவை?

(04 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) நாடு கடத்தப்பட்ட காலத்தில் அனுபவித்த நம்பிக்கைக்கு எதிரான சவால்களுக்கு முகங்கொடுக்கும்போது, வாய்மொழி மரபில் நிலவி வந்த இறை கருத்துக்கள் எழுத்து வடிவம் பெறுவதற்குரிய தேவை ஏற்பட்டதற்கான காரணங்களை விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) இறைவனுடைய விருப்பமும், திட்டமும் நிறைவேற்றப்பட்ட முறையினை எடுத்துக்காட்ட எழுதப்பட்ட திருவிவிலியத்தைத்தழுவி, உமது வாழ்வில் இறை விருப்பம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

5. (i) இறை ஏவுதலின் **மூன்று** வகையையும் பெயரிட்டு, அவை ஒவ்வொன்றையும் உதாரணம் தந்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறை ஏவுதலால் எழுதப்பட்ட இறைவார்த்தை மூலமாகவும், சிறப்பான விடுதலைப் பயண நிகழ்வின் மூலமாகவும் இறை வெளிப்பாட்டைப் பெறும் நீர், இன்றைய சமுதாயத்தில் இறை பராமரிப்பை எவ்வாறு உணருகிறீர் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

6. (i) மாட்டின் லூத்தர் ஆரம்பித்த ஆக்ஸ்பேர்க் விசுவாச சபையின் போதனைகள் **பத்தினைப்** பட்டியற்படுத்துக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்தவக் கலையின் பின்வரும் அம்சங்கள் ஒவ்வொன்று பற்றியும் முக்கிய **இரண்டு** காரணிகள் வீதம் விபரிக்குக.
(அ) கிறிஸ்தவ இலக்கிய நூல்கள்
(ஆ) கிறிஸ்தவ சங்கீதம்
(இ) கட்டடக்கலை
(ஈ) சிற்பக்கலை
(உ) சித்திரக்கலை (10 புள்ளிகள்)

7. (i) போர்த்துக்கேயரின் ஆட்சியினால் இலங்கைக்குக் கிடைத்த சாதகமான பெறுபேறுகள் பற்றி மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ii) "தூய யோசப்வாஸ் அடிகளார், அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்தமையால் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் ஓர் புதிய யுகம் உருவாகியது" என்பதனைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விபரிக்குக.
(அ) தூய யோசப்வாஸ் அடிகளார் ஆற்றிய கடின சேவைகள்
(ஆ) தூய யோசப்வாஸ் அடிகளாரின் இரக்கப்பணி
(இ) தூய யோசப்வாஸ் அடிகளார் தேசிய கலாசார அம்சங்களை இலங்கைக் கத்தோலிக்க மறையுடன் தொடர்புபடுத்திய விதம்
(ஈ) அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் சிங்கள கத்தோலிக்க இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகள்
(உ) அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் இசையாற்றல் (10 புள்ளிகள்)

8. (i) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கல்வி வளர்ச்சியடைந்த விதத்தை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கை நாட்டில் மனித கௌரவம் சவால்களுக்கு உட்பட்ட சந்தர்ப்பங்களில் இலங்கை கிறிஸ்தவ திருச்சபை அவற்றை சீர்செய்ய முன்வந்த சந்தர்ப்பங்கள் **ஐந்தின்** மீது உமது கவனத்தைச் செலுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

* * *

More Past Papers at
tamilguru.lk